APRIL/MAY 2024

FTA41/CTA41/BTA41 — இலக்கியம் 4 – காப்பியங்கள்

Time : Three hours Maximum : 75 marks

SRI VINAYAGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகளை எழுதுக.

2. 'யாரையோ நீ மடக்கொடி'– என யார் யாரிடம் கூறினார்?

3. மணிமேகலை காப்பியம் உணர்த்தும் மிகச் சிறந்த அறம் எது?

4. உதயணன் நாடு எது?

5. சேக்கிழார் பெரியபுராணத்திற்கு இட்ட பெயர் என்ன?

6. இளையான்குடியில் சிவபெருமான் யாரை ஆட்கொண்டார்?

7. கும்பகருணனை வீரர்கள் எங்ஙனம் துயிலெழுப்பினர்?

8. 'நின் பெருங்கிளையும் நின்னையும் படுத்தனை' என்று கூறியது யார்? யாரிடம் கூறியது?

9. பாலமாட்சி படலம் – பொருள் விளக்கம் தருக.

10. வேடன் மானை எவ்வாறு பிடித்தான்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) கோவலன் கண்ணகியை வருணித்த முறையை எழுதுக.

(அல்லது)

(ஆ) வாயில் காவலன் பாண்டிய மன்னனிடம் கண்ணகியை எவ்வாறு அறிமுகம் செய்தான்?

12. (அ) தீவதிலகை மணிமேகலையிடம் கூறியவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) உதயணன் பெற்ற பேறுகளை விளக்குக.

13. (அ) சேக்கிழார் பெரியபுராணத்தின் மாறனாரை எங்ஙனம் அறிமுகப்படுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) சிவனடியாருக்கு விருந்தோம்ப மாறனாருக்கு அவரது மனைவி காட்டிய வழிமுறைகளை எழுதுக.

14. (அ) கும்பகருணனின் தோற்றப் பொழிவையும் உணவு உட்கொண்ட முறையையும் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இராவணன் கும்பகருணனைப் போருக்கு அனுப்பிய முறையை விளக்குக.

15. (அ) பாலமாட்சி படலக் குழுவிப் பருவ நிகழ்வுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) முகமதுநபி வேடனுக்குமான உரையாடல்களை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

16. சிலப்பதிகாரம் புரட்சிக் காப்பியம் என்பதை வழக்குரை காதை வாயிலாக நிறுவுக.

17. மணிமேகலை பாத்திரம் பெற்ற முறையையும் பாத்திரத்தின் சிறப்பையும் விவரி.

18. இளையான்குடி மாறனாரின் பக்தி திறத்தை விளக்கி எழுதுக.

19. போர் நேர்ந்தமைக்கு வருந்தி கும்பகருணன் இராவணனுக்குக் கூறிய அறிவுரைகளைத் தொகுத்தெழுதுக.

20. நபிகள் மானுக்காகப் பிணையாக நின்ற அருட்திறத்தைக் கட்டுரைக்க.

———————